# தரக்குறைவான பேச்சால் பதவியின் கண்ணியத்தை குறைத்துக் கொள்கிறார்!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினிடம் அமைச்சர் நிர்மல்குமார் மன்னிப்பு கேட்க வேண்டும்!

அமைச்சர் நிர்மல் குமார் அவர்களே

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை "கோமாளி" என்று விமர்சித் திருப்பது அரசியல் நாகரிகத்தின் வீழ்ச்சியையே வெளிப்படுத்து கிறது.

அமைச்சரின் நாவுக்கு கட்டுப்பாடு இல்லையென்றால், அது அரசின் பொறுப்புணர்வுக்கு கேள்விக்குறியாகவே அமையும்.

மக்கள் அன்றாடம் சந்திக்கும் பாலியல் சீண்டல், கற்பழிப்பு, கொலை, கொள்ளை, லாக்கப் டெத், ஆள் கடத்தல், நில அபகரிப்பு, பணம் கேட்டு மிரட்டுதல், ஊழல், அரசு நிலங்களில் காலங் காலமாக குடியிருந்து வரும் ஏழை எளிய மக்களின் வீடுகளை இடித்தல், சட்டம் ஒழுங்கு சீர்கேடு போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாத அமைச்சர், தரக்குறைவான வார்த்தைகளால் அரசியல் கவனம் ஈர்க்க முயல்வது அவரது செயல்பாடுகளில் உள்ள வெற்றிடத்தையே காட்டுகிறது.

கொள்கைக்கு கொள்கை யால் பதிலளிக்க முடியாதவர்கள் மட்டுமே இழிவான வார்த்தைகளை ஆயுதமாக பயன்படுத்துவார்கள்.

ஒரு அமைச்சரின் வார்த்தைகள் அரசின் தரத்தை பிரதிப லிக்க வேண்டும். ஆனால் நிர்மல் குமார் அவர்களின் இந்தப் பேச்சு, அவரது பதவி யின் கண்ணியத்தைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல், அரசியல் கலாச்சாரத்தையும் அவமதிக்கும் செயலாகும்.

தமிழக மக்கள் நாகரிகமான அரசியலையே விரும்புகிறார்கள்; தரம் தாழ்ந்த வசை பாடுகளையும் ஆணவப் பேச்சுகளையும் அல்ல. அரசியல் என்பது மேடைப் பேச்சுப் போட்டி அல்ல; அது மக்களின் நம்பிக்கையை சுமக்கும் பொறுப்பு என்பதை அமைச்சர் உணர வேண்டும்.

அமைச்சர் நிர்மல் குமார் அவர்கள் தனது தரக்குறை வான பேச்சுக்கு உடனடியாக பொதுமக்களிடமும், எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடமும் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும். தொடர்ந்து இதுபோன்ற நாகரிகமற்ற அரசியலை முன்னெடுத்தால், தி.மு.க. தொண்டனும், ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை கொண்ட தமிழக மக்களும் தக்க நேரத்தில் ஜனநாயக வழியில் அதற்கான பதிலை அளிப்பார்கள்.



**கே.அசோகன்**
கழகத் தொண்டன்,
வழக்கறிஞர்,
திண்டிவனம்,
விழுப்புரம் மாவட்டம்

### காமன்வெல்த் பளுதூக்கும் போட்டியில்

# வெள்ளிப்பதக்கம் வென்ற ராஜா முத்துப்பாண்டி!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வாழ்த்து!

சென்னை, ஜூலை 28 –

ஸ்காட்லாந்தில் நடைபெற்று வரும் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் பளுதூக்கும் போட்டியில் வெள்ளிப் பதக்கம் பெற்ற ராஜா முத்துப் பாண்டிக்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வாழ்த்தும் பாராட்டுகளும் தெரிவித்துள்ளார்.



அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:

ஸ்காட்லாந்தில் நடைபெற்றுவரும் காமன்வெல்த் பளுதூக்குதல் போட்டியில் பங்கேற்று, வெள்ளிப் பதக்கம் வென்றிருக்கும் கோவில்பட்டி சங்கரலிங்கபுரத்தைச் சேர்ந்த ராஜா முத்துப்பாண்டி அவர்களுக்கு எனது பாராட்டுகள்.

அவர் மென்மேலும் பல்வேறு உயரங்களை அடைய எனது வாழ்த்துகள்.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### த.வெ.க. ஆட்சியின் மெத்தன போக்கு ஆண்டிபட்டி தொகுதி கடமலை - மயிலை ஒன்றியத்தில் கடையடைப்பு போராட்டம்

# உயிர் இருக்கும் வரை வருசநாடு மலை கிராம மக்களை வெளியேற்ற விடமாட்டேன்!

## தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் பேச்சு!

தேனி, ஜூலை 28 -

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி தாலுகாவிற்கு உள்ள த.வெ.க. ஆட்சி மெத்தன கோபால் தும்மக்குண்டு மேகமலை உள்ளிட்ட ஊராட்சிகளுக்கு உட்பட்ட 98 மலைக் கிராமங்களில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பல தலைமுறைகளாக வசித்து வருகின்றனர். இலவம், முந்திரி, மிளகு, ஏலம் உள்ளிட்டவைகளை பயிர் செய்து பிழைப்பு நடத்தி வரும் இவர்களை, புலிகள் காப்பகம் என்ற பெயரில் வன ஆக்கிரமிப்பாளர்களாக கூறி உச்சநீதிமன்ற உத்தரவுப்படி வெளியேற்றும் நடவடிக்கை நடந்து வருகிறது. இதனால் மேகமலை மலைவாழ் மக்கள் அச்சத்துடன் உள்ளனர்.



இந்நிலையில் மேகமலை மலைவாழ் வாழ்வாதாரம் காத்திட அரசு நடவடிக்கை எடுக்கக் கோரி இன்றையதினம் கடமலை மயிலை ஒன்றியத்தில் ஒரு நாள் கடையடைப்பு போராட்டம் நடைபெற்றது கண்டமனூர், கடமலைக்குண்டு மயிலாடும் பாறை வருசநாடு என கடமலை மயிலை ஒன்றியத்தில் உள்ள சுமார் 20 ஊராட்சிகளுக்கு உட்பட்ட நூற்றுக்கணக்கான கிராம மக்கள் மேகமலை மலைவாழ் மக்களுக்கு ஆதரவாக இந்த கடையடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அப்பகுதிகளில் உள்ள தேநீர் கடைகள், பலசரக்கு கடைகள், உரம், பூச்சி மருந்து, ஜவுளி, நகைக் கடைகள் என அனைத்து வகையான கடைகளும் அடைக்கப் பட்டுள்ளன. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. பேருந்துகள் ஆட்டோ மட்டும் வழக்கம் போல் இயங்குகின்றன.

தொடர்ந்து மேகமலை மலைவாழ் மக்களின் வாழ்வாதாரம் காத்திட கடமலைக்குண்டு பகுதியில் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்ற கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்தது. கடமலைக்குண்டு பகுதியில் உள்ள விநாயகர் கோயில் திடலில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், ஆண்டிபட்டி தி.மு.க. எம்.எல்.ஏ. மகாராஜன் அ.தி.மு.க. தேனி கிழக்கு மாவட்டச் செயலாளர் முருக்கோடை இராமர், பா.ஜ.க. மாவட்ட தலைவர் ராஜபாண்டி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட செயலாளர் ராமச்சந்திரன் உள்பட வணிகர்கள் , விவசாயிகள், வர்த்தகர்கள் வழக்கறிஞர்கள் சங்கத்தினரும் பங்கேற்றனர். அப்போது மேகமலை மலைவாழ் மக்களுக்கு 2006 வன உரிமைச் சட்டத்தின் கீழ் பட்டா வழங்க வேண்டும், உச்சநீதிமன்ற உத்தரவுக்கு எதிராக தமிழக அரசு சீராய்வு மனுத்தாக்கல் செய்ய வேண்டும் என பல்லாயிரக்கணக்கானோர் முழக்கங்களை எழுப்பினர்.

முன்னதாக கண்டன உரையாற்றிய ஆண்டிபட்டி தி.மு.க. எம்.எல்.ஏ. மகாராஜன், எனது உயிர் இருக்கும் வரை வருசநாடு மலை கிராம மக்களை வெளியேற்ற விட மாட்டேன். எனது உயிர் போனால் தான் அந்த மக்களை வெளியேற்ற முடியும் என்று உணர்ச்சிபூர்வமாக பேசினார்.

தங்களின் வாழ்வாதார கோரிக்கையை அரசு நிறைவேற்றக் கோரி வரும் ஆகஸ்ட் 1 ஆம் தேதியன்று வருசநாடு பகுதியில் உண்ணாவிரதப் போராட்டமும், அதனைத் தொடர்ந்து ஆகஸ்ட் 7 ஆம் தேதியன்று தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்த இருப்பதாக போராட்டக் குழுவினர் தெரிவித்தனர்.

# ஆவின் பாலுக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு!

## தனியார் பால், தயிர் விலை 2-ஆவது முறையாக உயர்வு!

சென்னை, ஜூலை 28 -

தமிழகத்தில் இவ்வாண்டில் 2ஆவது முறையாக தனியார் பால் நிறுவனங்கள் பால், தயிர் விலையை லிட்டருக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை உயர்த்தி யுள்ளன. இதனால், ஆவின் பாலுக்கான தேவை அதிகரித்து தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதாக தமிழ்நாடு பால் முக வர்கள் தொழிலாளர்கள் நலச்சங்கம் தெரி வித்துள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கத்தின் மாநிலத் தலைவர் சு.ஆ.பொன்னுசாமி ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கை: ஆரோக்யா வை தொடர்ந்து அமிர்தா வேதா, சன், ராஜ், சக்ரா, திருமலா, ஜெர்சி, ஹெரிடேஜ், டோட்லா உள்ளிட்ட நிறுவனங்கள் நிகழாண்டில் 2ஆவது முறையாக பால், தயிர் ஆகியவற்றின் விலையை ஞாயி ற்றுக் கிழமை (ஜூலை 26) முதல் லிட்டருக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை உயர்த்தியுள்ளன.

பால் உற்பத்தி குறைவு, கொள்முதல் விலை மற்றும் மூலப்பொருள்களின் விலை உயர்வு காரணமாக விலை உயர்த்தப்பட்டாலும், பால் முகவர்களின் 'கமிஷன்' மற் றும் ஊக்கத் தொகையை உயர்த்த தனியார் நிறுவனங்கள் முன்வரவில்லை. எரிபொ ருள், கடை வாடகை, ஊழியர் ஊதியம் உள்ளிட்ட செலவுகளைக் கருத்தில் கொண்டு, பால் முகவர்களுக்கு சதவீத அடிப்படையில் கமிஷன் மற்றும் ஊக்கத் தொகை வழங்கவேண்டும்.

இந்த ஆண்டில், மொத்தமாக லிட்ட ருக்கு ரூ.6 வரை விலை உயர்ந்துள்ளதால், குறைந்த விலை கொண்ட ஆவின் பாலை மக்கள் அதிகம் வாங்கும் நிலை உருவா கியுள்ளது. அதனால், ஆவின் பாலுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்புள் ளதால், தமிழகத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

### மதுரை மாநகர் தி.மு.க.

# மூத்த முன்னோடி ஆ.இலக்குமணன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!



மதுரை, ஜூலை 28 -

மதுரை - தல்லாகுளம் பகுதியில் கழகத்தை வளர்த்த மூத்த முன்னோடி ஆ.இலக்குமணன் அவர்கள் (வயது 80) முதிர்வின் காரணமாக 25.07.2026 இரவு தனது இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் தி.மு.க வட்டச் செயலாளர் முத்து மோகன், மாநகர் மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை மேனாள் அமைப்பாளர் டி.வி. அழகர், திராவிடர் கழகத் தோழர் முத்திருளன் மற்றும் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்களும் அன்னாரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

### கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் – அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம்

# மகாராஜபுரம் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் ரெ.மகேஷ் ஆலோசனை வழங்கினார்!

கன்னியாகுமரி, ஜூலை 28 -

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம், மகாராஜபுரம் ஊராட்சி தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டமானது 26.07.2026, ஞாயிறு அன்று மாலை 6.30 மணிக்கு அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய செயலாளர் பா. பாபு தலைமையில் மகாராஜபுரம், செல்வமணி இல்ல வளாகத்தில் வைத்து நடைபெற்றது.




கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் ரெ. மகேஷ் கலந்து கொண்டு கழக வளர்ச்சி பணிகள் தொடர்பான ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

ஆலோசனைக் கூ ட்டத்தில் மாநில கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை செயலாளர் என்.தில்லை செல்வம், ஒன்றிய துணைச் செயலாளர் பாலசுப்பிரமணியன், ஒன்றிய பிரதிநிதி சுப்பையா, கழக நிர்வாகிகள் சிவசுப்பிர மணியன், செல்வமணி, தாமரை பிரதாப் உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள், BLA2, BLC, BDA மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

தீர்மானம்: 1

மகாராஜபுரம் ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலகத்தை உடனே திறந்து செயல்பாட்டிற்கு கொண்டு வர வேண்டி அகஸ்தீஸ்வரம் வட்டார வளர்ச்சி அலுவலரை இக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம்: 2

நரிக்குளம் பகுதியில் ஏற்பட்டுள்ள குடிநீர் தட்டுப் பாட்டை போக்கிடவும், சுந்தரபுரம் பகுதியில் சுடுகாடு வசதி ஏற்படுத்திட வேண்டியும், கே.வி.கே. நகரில் மண் சாலையை தார் சாலையாக மாற்றிட உள்ளிட்ட கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றிட வேண்டி ஊராட்சி நிர்வாகம் மற்றும் அகஸ்தீஸ்வரம் வட்டார வளர்ச்சி அலுவலரை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம்: 3

வருகின்ற உள்ளாட்சித் தேர்தலில் வெற்றி பெறும் வகையில் அதற்கான களப் பணிகளை இன்றே தொடங்கி செயல்படுத்துவது என தீர்மானிக்க ப் பட்டது.

தீர்மானம்: 4

கடந்த தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்காக உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியினருக்கும் மற்றும் வாக்களித்த அனைத்து வாக்காள பெருமக்களுக்கும் மாவட்ட தி.மு.கழகம் மற்றும் அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது.

### சிவகாசி அருகே சட்டவிரோதமாக

# பட்டாசு தயாரித்தபோது ஏற்பட்ட வெடி விபத்தில் 4 பேர் பலி!

சிவகாசி, ஜூலை 28-

சிவகாசி அருகே சட்ட விரோதமாக பட்டாசு தயாரித்த போது ஏற்பட்ட வெடி விபத்தில் பலி எண்ணிக்கை 4 ஆக உயர்ந்துள்ளது. ஏற்கனவே ராம்பிரகாஷ் (32), இன்னாசி முத்து (44), ஐயப்பராஜ் (37) ஆகியோர் உயிரிழந்த நிலையில், தற்போது பாண்டித்துரை (35) என்பவர் உயிரிழந்தார்

விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகே செங்கமல பட்டியை சேர்ந்தவர் ரவீந்திரன். இவருக்கு இப்பகுதியில் 72 சென்ட் விவசாய நிலம் உள்ளது. இந்த நிலத்தில் தற்போது விவசாயம் நடைபெறவில்லை.

இந்நிலையில், ரவீந்திரனின் மகன்கள் ராம் பிரகாஷ் (30), ராமச்சந்திரன் (40) ஆகியோர் நிலத்தி லுள்ள கிணற்று பகுதியில் தகரஷெட் அமைத்து சட்டவிரோதமாக பட்டாசு தயாரித்து வந்துள்ளனர்.

இன்று காலை 8.30 மணியளவில் இந்த தகர செட்டில் வழக்கம்போல் ராம்பிரகாஷ், ராமச்சந்திரன் உட்பட 3 பேர் பட்டாசு தயாரித்து கொண்டிருந்தனர். அப்போது, உராய்வு காரணமாக திடீரென வெடி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் ராம் பிரகாஷ் மற்றும் வாலிபர் உடல் சிதறி பரிதாபமாக உயிரிழந்தனர்.

ராமச்சந்திரன் (40) படுகாயமடைந்தார்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் படுகாயமடைந்த ராமச்சந்திரன் மற்றும் பலியான ராம் பிரகாஷ், வாலிபரின் உடல்களை மீட்டு சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.


அங்கு ராமச்சந்திரனுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுகுறித்து சிவகாசி கிழக்கு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து சட்டவிரோத பட்டாசு உற்பத்தியில் ஈடுபட்டதாக 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பல லட்சம் ரூபாய் மதிப்பிலான பட்டாசுகள், மூலப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புதுப்பட்டி மிசா சொக்கலிங்கம்

### ஜூலை 28 (2007)



தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு, சிறுவயது முதலே திராவிட இயக்கத்தில் பற்றுடையவராகவும், கழகம் துவக்கப்பட்ட காலத்தில் கழகத்தின் வளர்ச்சிக்கும் பாடுபட்டவர்.

திருப்பத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளராக பலமுறை பொறுப்பு வகித்தவர்.

பழைய முகவை மாவட்ட கூட்டுறவு வங்கியின் இயக்குநராகவும், கழக ஆட்சிக்காலங்களில் பல்வேறு பொறுப்புகளையும் வகித்தவர்.

கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக, மதுரை மத்திய சிறையில், மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**